**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : வெங்குடுசாமி | **Caste** | : | |
| **Father's Name** | : ராஜாராம் | **Calling** | : | சேல்ஸ் மேன் |
| **Village** | : மொட்டனப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **32/2026** |
| | | **Dated** | : | **10.03.2026** |

**10.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு. வெங்குடுசாமி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.6** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் காவலில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் மாவட்டம் மொட்டனப்பட்டியில் குடியிருந்து மசாலா கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை செய்துவருகிறேன். கடந்த 2019ம் வருடம் மசாலா கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை செய்துவந்தேன். தேதி மாதம் நினைவில் இல்லை. எங்களது மசாலா கம்பெனியின் முதலாளி வீட்டில் நகை திருடு போயிருந்தது. பின்பு எதிரிகளை பிடித்து நகையை மீட்டார்கள். பேங்கில் வைத்து நகையை கைப்பற்றியபோது நகை ஒப்படைப்பதற்காக சொல்லி என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் 1 மற்றும் 2ம் எதிரி ஒப்புதல்வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும்

என்னுடையது. அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் என்னுடையது. **1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆகவும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 11.09.2019ம் தேதி காவல் துறையின் திண்டுக்கல் – மா.மூ.கோவிலூர் செல்லும் ரயில்வே கேட் அருகே TN 39 AU ஸ்பிளண்டர் மோட்டார் சைக்கிளில் மேற்கு – கிழக்கு நோக்கி வந்தவர்களை போலிசாா் நிறுத்தியபோது அவர்கள் இருசக்கர வாகனத்தை அங்கேயே போட்டுவிட்டு தப்பி ஓட முயற்சித்தபோது போலிசார் விரட்டிப்பிடித்து விசாரித்தார்கள். அந்த இரு நபர்களும் பல குற்றங்களில் தொடர்புடையவர்கள் என சொன்னார்கள். எவ்வித அச்சுறுத்தலுமின்றி ஒப்புதல் வாக்குமூலம் தர சம்மதித்தார்கள். போலிசார் 2 எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னால் பதிவு செய்து அதனடிப்படையில் 2ம் எதிரி ஆஜர் செய்த தங்க தாலிச்செயினை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து கையொப்பம் பெற்றார்கள் என போலிசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C — Digitally signed by DINESH KUMAR C Date: 2026.03.10 14:02:15 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.62/2020**

**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : அரியவேல் | **Caste** | : | |
| **Father's Name** | : வேலாயுதம் | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **56/2026** |
| | | **Dated** | : | **10.03.2026** |

**10.03.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 **திரு. அரியவேல்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 7** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி வேறொரு வழக்கில் காவலில் உள்ளார்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 28.07.2019ம் தேதி தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது திண்டுக்கல் R.M காலணியைச் சேர்ந்த பெஞ்சமின் மனைவி வாசவி நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலையக் குற்ற எண்.308/2019 சட்டப்பிரிவு 379 இதச வாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு <u>செய்யப்படுகிறது</u>**. வழக்குக்கோப்பை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் வசம் சமர்ப்பித்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

மொட்டனம்பட்டியில் குடியிருந்து மசாலா கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை செய்துவருகிறேன். கடந்த 2019ம் வருடம் மசாலா கம்பெனியில் சேல்ஸ் மேனாக வேலை செய்துவந்தேன். தேதி மாதம் நினைவில் இல்லை. எங்களது மசாலா கம்பெனியின் முதலாளி வீட்டில் நகை திருடு போயிருந்தது. பின்பு எதிரிகளை பிடித்து நகையை மீட்டார்கள். பேங்கில் வைத்து நகையை கைப்பற்றியபோது நகை ஒப்படைப்பதற்காக சொல்லி என்னிடம் மட்டும் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் 1 மற்றும் 2ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் என்னுடையது.

அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் என்னுடையது. **1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆகவும் 2ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.5 ஆகவும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்குவிசாரணை– இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.10 14:02:20 +0530

Judicial Magistrate No.II
Dindigul.